Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 14.11.2024/Script.

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்--மலர்விழி

தேதி 14.11.2024 நேரம் மாலை 6.10

---

தலைப்புச் செய்திகள்

பழங்குடியினர் கவுரவ தினத்தை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்ற உள்ளார்.

ஊரக மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பழங்குடியின சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்காக பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி பீகாரில் நாளை தொடக்கி வைக்க உள்ளார்.

மனித வளம், செயற்கை நுண்ணறிவு, தூய்மையான எரிசக்தி மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற முக்கிய துறைகளில் இந்தியா முன்னேறி உள்ளது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.

திறமையான மாணவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு பள்ளிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும், புதுச்சேரி அரசு செய்து கொடுக்கிறது என்று புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

*முர்மு*

பழங்குடியினர் கவுரவ தினத்தை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்ற உள்ளார். குடியரசு தலைவரின் உரை ஆகாஷ்வாணியின் நேரடி ஒலிபரப்பாக எப்.எம். கோல்டு மற்றும் எப்.எம் ரெயின்போ அலைவரிசைகளில் ஒலிபரப்பாக உள்ளது. குடியரசு தலைவரின் உரை நாளை காலை 8.45 மற்றும் மாலை 5.30 மணிக்கு அனைத்து வானொலி நிலையங்கள் மற்றும் பண்பலை அலைவரிசைகளில் மறுஒலிபரப்பு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*பிரதமர்*

ஊரக மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பழங்குடியின சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்காக 6 ஆயிரத்து 640 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தொடக்கி வைக்க உள்ளார். பழங்குடியினர் கவுரவ தினம் மற்றும் பகவான் பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்களின் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பீகார் மாநிலம் ஜமுயிக்கு செல்கிறார். பகவான் பிர்சா முண்டாவை கவுரவிக்கும் வகையில் நினைவு நாணயம் மற்றும் தபால் தலையை பிரதமர் வெளியிட உள்ளார். மேலும் பிரதம மந்திரி ஜன்ஜதி ஆதிவாசி நியாய மகா அபியான் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 11 ஆயிரம் வீடுகள் மற்றும் 23

நடமாடும் மருத்துவ பிரிவுகளை திறந்து வைக்கும் நிகழ்ச்சியிலும் பிரதமர் பங்கேற்க உள்ளார். பழங்குடியின தொழில் முனைவோரை ஊக்குவிக்க 300 வன் தன் விகாஸ் கேந்திரங்களையும், பழங்குடியின மாணவர்களுக்கான 10 ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளையும் திரு நரேந்திர மோடி தொடக்கி வைக்க உள்ளார். பகவான் பிர்சா முண்டாவின் பிறந்த நாளான நவம்பவர் 15-ஆம் தேதி பழங்குடியின கவுரவ தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுவதை முன்னிட்டு பிரதமர் பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் தொடக்கி வைக்க உள்ளார்.

*பிரதமர்*

டொமினிகா நாட்டின் உயரிய தேசிய விருதை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்குவதாக அந்நாட்டு அதிபர் திரு சில்வானி பர்ட்டன் தெரிவித்துள்ளார். கோவிட்-19 தாக்கத்தின் போது பிரதமர் திரு நரேந்திர மோடி அந்நாட்டிற்கு வழங்கிய பங்களிப்பையும், இந்தியா மற்றும் டொமினிகா இடையேயான கூட்டாண்மையை வலுப்படுத்துவதில் திரு மோடியின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையிலும் இந்த விருது வழங்கப்படுவதாக அந்நாட்டு அதிபர் கூறி உள்ளார். கயானாவின் ஜார்ஜ் டவுனில் வரும் 19-முதல் 21-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தியா-கேரிகாம் உச்சி மாநாட்டில் இந்த விருது வழங்கப்படும் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

## ஜெய்சங்கர்

மனித வளம், செயற்கை நுண்ணறிவு, தூய்மையான எரிசக்தி மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற முக்கிய துறைகளில் புதுமைகளை ஏற்றுக் கொள்வது உள்ளிட்டவை இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்கள் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார். துபாயில் நடைபெற்ற சிம்பயாசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தின் முதல் வெளிநாட்டு வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சிக்கு டாக்டர் ஜெய்சங்கர் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்த விழா இந்தோ-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உறவுகளில் ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல் என்றும், ஐக்கிய அரபு எமிரேட்சின் கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஆணையத்தில் இருந்து அங்கீகாரம் பெறுவது பல்கலைக்கழகத்தின் சாதனை என்றும் குறிப்பிட்டார். மேலும் இந்த வளாகம் மேலாண்மை, தொழில்நுட்பம் மற்றும் ஊடகம் ஆகியவற்றில் விரிவான திட்டங்களை வழங்கும் 21-ஆம் நூற்றாண்டின் திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது என்றும் பெருமிதம் தெரிவித்தார். இந்த தொடக்க விழா நிறுவன விரிவாக்கத்திற்கு அப்பாற்பட்டது என்றும், இதன் கொள்கை இருநாடுகளுக்கும் இடையேயான கல்வி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார். விழாவில் கலந்து கொண்ட அந்நாட்டு அமைச்சர் திரு ஷேக்

நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் உரையாற்றுகையில், இந்தியாவிற்கும், ஐக்கிய அரபு எமிரேட்சுக்கும் இடையிலான ஆழமான உறவுகளை எடுத்துக் கூறினார். புரிந்துணர்வு, அமைதி, மற்றும் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், ஐக்கிய அரபு எமிரேட்சின் செழிப்பிற்கு இந்திய சமூகம் பெரும் பங்கு அளிப்பதாகவும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

**தேர்தல்**

மகாராஷ்டிர மாநிலத்தில் மொத்தம் உள்ள 288 தொகுதிகளுக்கு வரும் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பிரதமர் திரு நரேந்திர மோடி சத்திரபதி சம்பாஜி நகர், பன்வேல் ஆகிய இடங்களில் பேரணிகளில் கலந்து கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார். காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்கட்சி தலைவருமான திரு ராகுல்காந்தி, நந்தர்பார், நான்டெட் பகுதியில் வாக்கு சேகரித்தார்.

ஜார்கண்ட் மாநிலத்தின் 38 தொகுதிகளுக்கு வரும் 20-ஆம் தேதி 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் பேரணிகள் நடத்தியும், பொதுக் கூட்டங்களில் உரையாற்றியும், வாக்கு சேகரித்து வருகின்றனர். பாஜக

மூத்த தலைவரும், உத்தரபிரதேச முதலமைச்சருமான திரு யோகி ஆதித்யநாத் தன்பாத்-தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்த இரு மாநிலங்களில் நடைபெறும் வாக்குப் பதிவு வரும் 23-ஆம் தேதி எண்ணப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

*பியூஷ் கோயல்*

வர்த்தக கண்காட்சியை ஆண்டுக்கு இருமுறை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் வலியுறுத்தி உள்ளார். 43-ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் திரு பியூஷ்கோயல் இன்று தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பை விரிவுபடுத்தவும், அதனை நாடு தழுவிய அமைப்பாக மாற்றுவது குறித்து, அரசு பரிசீலித்து வருவதாகவும் கூறினார்.

14 நாட்கள் நடைபெறும் இந்த ஆண்டு கண்காட்சியின் கருப்பொருள் விக்சித் பாரத் @ 2047 என்பதாகும். இக்கண்காட்சி வரும் 18-ஆம் தேதி வரை வணிக வர்த்தகத்திற்காக திறந்திருக்கும் என்றும், பின்னர் வரும் 27-ஆம் தேதி வரை பொது மக்கள் பார்வைக்காக திறந்திருக்கும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு சீனா, எகிப்து, ஈரான், தென்கொரியா, தாய்லாந்து, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு

எமிரேட்ஸ் உள்ளிட்ட 11 நாடுகள் இந்த சர்வதேச கண்காட்சியில் பங்கேற்கின்றன.

*நேரு பிறந்த நாள்*

முன்னாள் பாரத பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளை ஒட்டி, புதுச்சேரி அரசு சார்பில் கடற்கரை காந்தி திடலில் உள்ள நேருவின் திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவை துணை தலைவர் திரு ராஜவேலு, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், உள்ளிட்ட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர், திரு ரமேஷ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த நேருவின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*குழந்தைகள் தினம்*

திறமையான மாணவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு பள்ளிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும், புதுச்சேரி அரசு செய்து கொடுக்கிறது என்று குழந்தைகள் தின விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்தார். நாட்டின் முதலாவது பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் 136-ஆவது பிறந்த நாள் இன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. புதுச்சேரி அரசின் பள்ளிக் கல்வி

இயக்ககம் சார்பில் இன்று காலை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழா 2024 நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறந்த படைப்பாளி குழந்தைகளுக்கு விருதுகளை வழங்கினார். நிகழ்ச்சியில், பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல், புதுப்பித்தல், சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ அங்கீகாரம் பெறுதல், தேசிய தகவலியல் மையம் மூலம் தொடங்கப்பட்ட இணைய தளம் ஆகியவற்றை முதலமைச்சர் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர், அரசு பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், ஆரம்ப பள்ளிகளில் தரமான கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார். மேலும் மாணவ,மாணவிகள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம், பள்ளிக் கல்வி இயக்குநர் பிரியதர்ஷினி, ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன், மானம்பேட்டை அரசு பள்ளிக்கும்,

காரைக்கால் நவோதயா வித்யாலயா பள்ளிக்கும் சென்று அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜவஹர்லால் நேருவின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

*நிழற்குடைகள்*

புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் ஸ்மார்ட் பேருந்து நிழற்குடைகள் அமைக்க சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க நிகழ்ச்சியான பூமி பூஜை இன்று காலை தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டையில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. புதுச்சேரியில் 15 இடங்களில் இந்த ஸ்மார்ட் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*காரைக்கால்*

காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் அவர்களின் மகள்களுக்கு இ-ஆட்டோ மற்றும் இ-ரிக்ஷா ஓட்டுவதற்கான இலவச பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு ஓட்டுனர் உரிமம் மற்றும் வங்கி கடன் பெற்றுத் தர வழிவகை செய்யப்படும் என்று நகராட்சி ஆணையர் செய்திக் குறிப்பு வெளியிட்டுள்ளார். 20 வயது முதல்

40 வயதிற்கு உட்பட்ட மகளிர் தங்களது ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, பிறந்த பதிவு, ரேஷன் அட்டை ஆகியவற்றின் நகல்கள் மற்றும் தங்களது புகைப்படத்துடன் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

***விவசாயிகள்***

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும், பயிர் உற்பத்தி திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் 2024-25-ஆம் ஆண்டில் காரைக்கால் பகுதியில் குறுவை பருவத்தில் நெல் சாகுபடி செய்த 794 பொது பிரிவு விவசாயிகளுக்கும், அட்டவணைப் பிரிவைச் சேர்ந்த 121 விவசாயிகளுக்குமான 91 லட்சத்து 58 ஆயிரத்து 710 ரூபாய்க்கான காசோலையை வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார் இன்று விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் வேளாண் இயக்குநர் திரு வசந்தகுமார் மற்றும் காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் திரு கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

***இரத்த தானம்***

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில், நாட்டு நலப்பணித்

திட்டம் மற்றும் அரசுப் பொது மருத்துவமனை இணைந்து ரத்த தான முகாமை கல்லூரி வளாகத்தில் நடத்தினர். கல்லூரி முதல்வர் திரு ஆராமுதன் முகாமை தொடக்கி வைத்தார். அனைத்து மாணவர்களுக்கும் இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு, சுமார் 50 பேர் இரத்த தானம் செய்தனர் என்று கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது. நிகழ்ச்சியில் கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் எஸ் மணிகண்டன் மற்றும் மாவட்ட நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் தாமோதரன், மருத்துவ அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பழங்குடியினர் கவுரவ தினத்தை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்ற உள்ளார்.

ஊரக மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பழங்குடியின சமுதாயத்தினரின் மேம்பாட்டிற்காக பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி பீகாரில் நாளை தொடக்கி வைக்க உள்ளார்.

மனித வளம், செயற்கை நுண்ணறிவு, தூய்மையான எரிசக்தி மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற முக்கிய துறைகளில் இந்தியா முன்னேறி உள்ளது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.

திறமையான மாணவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு பள்ளிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும், புதுச்சேரி அரசு செய்து கொடுக்கிறது என்று புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------